# ராதாகிருஷ்ணன்

ஆசிரியர்:

கருமுத்து. தி. மாணிக்கவாசகம், பி.ஏ.

1201 155
314
A
225

# ராதாகிருஷ்ணன்

ஆசிரியர் :

தி. மாணிக்கவாசகம், B. A.

தி. மாணிக்கவாசகம்

காமராசர் பல்கலைக்கழக அன்பளிப்பு
தி. சு. சண்முகம் நூலகம்.

பதிப்பாளர் :

திண்டுக்கல் பப்ளிஷிங் ஹவுஸ்

திண்டுக்கல்

மதுரை :: சென்னை—1

பதிப்புரிமை] 1957 [விலை: 25 காசுகள்

முதற் பதிப்பு: ஜூன்—1957.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 71
நன்கொடை எண்: A71

ஆசிரியர்
அனுமதி பெற்று
இந் நாடகத்தை
நடிக்கலாம்.

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் நூலகம்

தென்னிந்தியாவில் அச்சு இயற்றப்பெற்றது.
மதுரைக் கூட்டுறவு அச்சகம், 77, வடக்காவணிமூலவீதி, மதுரை.

## நாடக உறுப்பினர்கள்

கண்ணன்

பலராமன்

தருமர்

அர்ச்சுனன்

கர்ணன்

சகுனி

துரியோதனன்

ராதையின் கணவர்

பீஷ்மர்

சிசுபாலன்

சகாதேவன்

ராதை

பாமா

ருக்குமணி

பாஞ்சாலி

குந்தி

மற்றும் பலர்

★

# முன்னுரை

மக்கள் மனத்திலே மாருத இடம் பெற்று விட்டவன் கிருஷ்ணன். அவனுடைய காதலி ராதை. கிருஷ்ணனுக்கும் ராதைக்கும் ஏற்பட்ட காதலை புராணிகர்கள், இறைவனுக்கும், ஆன்மாவிற்கும் ஏற்பட்ட காதல் என்று கூறுவர். இறைவனை தலைவனுக்கும், ஆன்மாவைத் தலைவிக்கும் ஒப்பிட்டுக் கூறுவது உலக இயல்பு.

மகாபாரதத்திலோ, பாகவதத்திலோ ராதையைப் பற்றி ஏதும் கூறப்படவில்லை. **ஜெயதேவர்** எழுதிய **அஷ்டபதி** என்னும் கீத கோவிந்தத்தில் தான், கண்ணனுக்கும், ராதைக்கும் ஏற்பட்ட காதல் சிறப்பித்துக் கூறப்படுகிறது. கீத கோவிந்தத்தில் வரும் சில வரிகளின் பொருள் பின் வருமாறு உள்ளது:– காட்டு நிலத்தில் குழந்தையாகிய கண்ணன் விளையாடிக்கொண்டிருக்கிறான். அந்தி சென்றதும் இரவு வந்தது. இருள் எங்கும் சூழ்ந்தது. மேகங்கள் எங்கும் சூழ்ந்து நின்று மேலும் இருளை அதிகப்படுத்தின. காட்டுப் புலத்தில் காணப் பெறும் கரு நீலமுடைய தமலா மரங்களினுலும் எங்கு நோக்கினும் ஒரே இருட்டு. அதுபோது நந்த கோபன் அருகில் நின்ற ராதையை நோக்கி, "ராதையே! கண்ணனே மிகவும் சிறியவன். மேலும் பயந்தவன். எனவே இவனை வீடு கொண்டு சேர்ப்பாயாக"— என்று கூறுகிறான்.

ராதை கண்ணன் பிறந்தபோதே மணமானவள் என அறிகிறோம். வயதில் முதிர்ந்த ராதைக்கும், கண்ணனுக்கும் எவ்வாறு காதல் நிகழும் எனக் கேட்கும் நம்மைப் பார்த்து, "கண்ணனாகிய குழந்தை தெய்வீகப் பிறவியாதலால், உடனே பெரியவனாகும் தன்மை பெறுகிறான்" என்று கூறி விடுகின்றனர்.

கண்ணன் கடமை வீரன். பாரதப் போரில் சிறந்த இடத்தைப் பெற்றவன் அவன். சுருங்கக் கூறின் அவன் தீட்டிய திட்டத்தின் விளைவே பாரதப் போர் அவன் அறிவின் ஆழம்; வீரத்தின் விளை நிலம்; தந்திரத்தின் இருப்பிடம். இக் கண்ணன் மணந்த தேவியர் பலர் எனக் கூறப்படுகின்றனர் ஆனால் நாம் அவன் ருக்குமணி, பாமையுடன் வாழ்ந்து வந்ததைத்தான் சிறப்பாக அறிகிறோம்.

“ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்” என்னு பொய்யாமொழிப் புலவரின் வாக்கை மனத்திற் கொண்டு, கிருஷ்ணனின் வாழ்க்கையை ஆராய எழுந்ததே இந்நாடகம். ராதைக்கும் கண்ணனுக்கும் ஏற்பட்ட காதல் சிற்றின்பக் காதல் அல்ல என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டதாகும். ஆனால் அவர்கள் அன்புடன் பழகி, சிந்தையும் ஒன்றி வாழ்ந்து வந்ததைப் பற்றி என் கருத்தில் எழுந்த சிந்தனைகளின் கோவையே இந் நாடகமாகும். இலக்கிய நாடகங்கள் மிக அருகி வழங்கும் தமிழ்மொழி அரங்கில் இந்நாடக அணங்கையும் அறிஞர் கண்டு மகிழ்வாராக. வாழ்க தமிழ்த்தாய்.

11—6—’57
மதுரை.

ஆசிரியர்

★

உ

# இராதா கிருஷ்ணன்

**களம் : 1 காட்சி : 1**

*(ருக்மணியின் மாளிகை. பாமை உள் நுழைகிருள்)*

பாமா :- அக்கா! அவர் வந்துவிட்டாரா?

ருக்மணி :- தங்கையே வா! என்ன, வரும்போதே ஒரே கோபமாய் வருகிருய்? அவர் என்ன வேலையில்லாது தூங்கும் வேந்தர் பரம்பரையைச் சேர்ந்தவரா மாளிகையிலேயே அடைபட்டுக்கிடக்க? அவருடைய அரசியல் காரியம் என்னென்னவோ?

பாமா :- அக்கா! நீங்கள் ஒரு வெகுளி. வெளுத்ததெல்லாம் பாலென நம்பிவிடுகிறீர்கள். கண்ணன் இப்பொழுது இராதையின் மாளிகையிலே உல்லாசமாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருப்பார். பெயரே அவருக்கு மாதவன்தானே! மாதர்களோடுதானேயிருப்பார்?

ருக்மணி :- இராதா அம்மாவைப்பற்றி இப்படியெல்லாம் குறைகூருதேயடி. அவர்கள் நம் அன்னைக்குச் சமமானவர்கள். வயதில் எவ்வளவோ மூத்தவர்கள், அவர்களைப்பற்றிக் கன்னுபின்னுஎன்று பேசுவது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

பாமா :- அக்கா ! கண்ணன் இராதையிடம் எப்பொழுது பார்த்தாலும் கூடிப் பேசுவதற்கு என்ன இருக்கிறது? வயதில் மூத்தவள், மணமான வள், ஏன் நம் கணவரிடம் அவள் இவ்வளவு பரிவு காட்டவேண்டும்?

(பாமையின் தோழிகள் நுழைகிருர்கள்)

தோழிகள் :- அம்மா ! கண்ணனும், இராதையும் கூடிப் பேசிக்கொண்டிருக்கும்போது நாங்கள் ஒளிந்து கேட்டோம். கண்ணன் இராதையின் சொற்களைச் சிறிதுகூடத் தவறமாட்டாராம். நாட்டையே இழக்க நேரிட்டாலும் அதையும் அவர் பொருட்படுத்த மாட்டாராம்.

பாமா :- கேட்டீர்களா, அக்கா ! என்னைத்தான் பொருமைக்காரி என்று ஊர் தூற்றுகிறது! ஊம் ஊம்......

ருக்மணி :- பாமா ! நான் கண்ணனுக்காக எவ்வளவு தியாகம் செய்திருக்கிறேன் தெரியுமா? நீ அறியாய் ! அவர்தான் என் கண்கண்ட தெய்வம். அவருக்காக நான் என் பெற்ருேர்களையும் துறக்கச் சித்தமானேன் ; பின்பு, நீ அனுதையாய், சாம்பவானிடமிருந்து இங்குவந்தபோது, உன்னை என் தங்கையாக்கிக் கொண்டேன். அவர்மேல் உனக்குள்ள காதல் கெடக்கூடாதென்பதற்காகவும், என் கணவரின் உறுதிமொழியைக் காக்கவும் உன்னை அவருக்கு மனைவியுமாக்கினேன், ஆனுல், நீ............?

பாமா :- அக்கா ! நன்றாயிருக்கிறது உங்கள் பேச்சு ! இராதைக்காக, நாம் இருவரும் அவர் அன்பைத் தியாகம் செய்துவிடவேண்டும் என்று கூறுகிறீர்கள் ?

ருக்மணி :- ஒருத்தி ஒருவனைக் காதலித்துக் கைப்பிடித்தால் அவன் காரியம் எல்லாவற்றிற்கும் கைகொடுத்து உதவவேண்டும். இராதையோ ஒரு அரசியல் மேதை. அவர்களின் அறிவு நம் நாட்டிற்குத் தேவை. நம் கணவரான கண்ணன் களங்கமற்றவர்.

பாமா :- அக்கா ! கண்ணன் உங்களை நன்றாக ஏமாற்றிவிட்டார் !

ருக்மணி :- பாமா ! உண்மை தெரியாது உளறும் உன்னுடன் நான் பேச விரும்பவில்லை ! நீ போய்த்தூங்கு ! நேரமாகிவிட்டது !

பாமா :- சரி அக்கா ! ஏமாந்து விடாதீர்கள் ! நான் சென்று வருகிறேன்.

**களம் : 1 காட்சி : 2**

இடம் :-(*இராதையின் மாளிகை. அவள் தூங்கிக்கொண்டிருக்கிறாள். தோழி அவளை எழுப்புகிறாள். நல்ல கனவைக் கண்டுகொண்டிருந்த இராதை விழித்துப் பார்க்கிறாள்.*)

இராதை :- கண்ணா ! கண்ணா !!.........

தோழி :- அம்மா! உங்களுக்குக் கனவிலும் நனவிலும், கண்ணனைத் தவிர, வேறு ஒரு எண்ணமும் கிடையாதோ?

இராதை :- கடந்த கால நினைவுகள் என் மனக்கண்முன் தோன்றின. கனவு உலகிற்கே சென்றுவிட்டேன். கண்ணன் பிறந்தவுடனேயே என் மாளிகைக்கு வந்தான். வாரி எடுத்து அணைத்தேன். குறும்புச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே அவன் பாலனுனதையும் பார்த்தேன்.

தோழி :- பின்னர்!

இராதை :- நான் கண்ட கனவை மேலும் சொல்கிறேன். கேளடீ!

(கனவு உலகக் காட்சி)

கண்ணன் :- இராதையே! நீ அன்பின் பிறப்பிடம். எனக்கு உன்னை அல்லால் வேறு புகலிடம் ஏது?

இராதை :- குறும்புக்காரப் பயலே! இங்கே வாடா! என் கண்ணல்லவா! ஏதோ பெரிய மனிதன் போலப் பேசுகிறுயே!

கண்ணன் :- பாலனென்று என்னை நினைத்தாய். இதோ ஒரு முத்தம்.

*(யசோதை அங்கு வந்துவிடுகிறுள்)*

இராதை :- தாயே யசோதா, உன் குழந்தையை என் குழந்தைபோல் வாரி எடுத்து அணைத்தேன். ஆனால், அவன் எனக்கு மாலையிட்டவன்போல் ஒரு முத்தம் தந்தான், பாலனல்லடி அவன் !

யசோதை :- இராதை, ஏதோ விளையாட்டுக்குச் செய்தால் வினையாக எடுத்துக்கொள்கிறாயே; அவன் சாதாரணப் பையனல்லடி, தெய்வப் பிறவி.

இராதை :- அவனுக்கு ஒரு கோயில்கட்டிக் கும்பிடுங்கள். நான் வருகிறேன்.

(*கனவு முடிகிறது*)

தோழி :- எப்பொழுது கோயில் கட்டப் போகிறீர்களம்மா ?

இராதை :- அடி, பைத்தியமே ! மனிதர்களுக்குக் கோயில் கட்டிவிட்டால், இப்பொழுது நாட்டிலிருக்கும் பக்தியும், பயமும் பறந்துபோய் விடும், தெரியுமா ?

தோழி :- பாலனாய் உங்கள் கனவிலே வந்து விளையாடி, நீங்கள் வாரியணைத்த கண்ணன், இன்று மக்களின் மனதில் மாறாத இடம் பெற்றுவிட்டானே யம்மா! அவனை இருபது ஆண்டுகளாக, அன்புடன் அணைத்து ஆதரித்தீர்கள். உங்கள் கணவர்கூட அவன்மேல் பிரியமாகத்தானிருக்கிறார். ஆனால் நீங்கள் கண்ணனிடம் காட்டும் அன்பிலே, களங்கத்தைக் காண்கிறார்கள் மக்கள். உங்களுடைய

கணவருக்கு நீங்கள் துரோகம் செய்வதாகவே நினைக்கிறார்கள்.

இராதை :- தோழி! நம்நாட்டில் பெண்கள் உரிமையுடன் வாழவேண்டுமென்பதே என் எண்ணம். அரசியலிலும், பெண்கள் பெருமதிப்புப் பெறவேண்டும் என்பது என் அவா. அதனால் தான் நான் இரவென்றும் பகலென்றும் பாராது கண்ணனுடைய சுகதுக்கமே பெரிது என்று எண்ணி வாழ்கிறேன்.

தோழி:- பனை மரத்தின் கீழே இருந்து பாலைக் குடித்தாலும் மக்கள் மதுவை உண்பதாகவே கருது வார்களம்மா !

இராதை :- மக்கள் தலைவனை, மாநில முழுதும் ஆளும் மன்னர்மன்னனைக் காண்பதே என் இலட்சியம். அது முடியும்வரை நான் உறங்கேன்.

தோழி :- அம்மா ! மண்ணாசையால் மக்களுக்கு மனவேதனையைக் கொடுத்துவிடாதீர்கள். ஆடவரும் கண்டு அகமகிழும் அழகு படைத்தவன் கண்ணன். அதனால்தான் அஞ்சுகிறேன் அம்மா.

இராதை :- உன் ஐயத்திற்கு இடமேயில்லை. ஆனால் நீயே என்பேரில் சந்தேகம் கொண்டால் பிறரை எவ்வாறு நம்புவது ?

### களம் : 1 காட்சி : 3

*(துவாரகையில் கண்ணன் மாளிகை. பலராமனும், கண்ணனும் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள்.)*

கண்ணன் :- அண்ணு ! என்னை சூழ்ச்சிக்காரன் என்று உலகம் கூறுகிறது. பாண்டவர்களின் பாங்கன் என்று துரியோதனன் நினைக்கிருன். நான் வஞ்ச நெஞ்சமுடையவன் என்று நீங்களும் நினைக்கின்றீர்கள், இல்லையா ?

பலராமன் :- தம்பி ! நான் பல திட்டங்களைத் தீட்டினேன். நீ எடுப்பார் கைப்பிள்ளையாகி, நாட்டின் நன்மையை மறந்து வாழ விரும்புகிருய். போதாததற்கு இராதையும் உன்னிடம் ஒரு தனி அன்பு பாராட்டுகிருள். அவளது மாயவலையிலே சிக்குண்டு கடமையை மறந்துவிட்டாய்.

கண்ணன் :- அண்ணு ! கடமை என்பதற்கே இன்னதென்று விளக்கம் தரப்போகும் நானு கடமையை மறப்பேன் ?

பலராமன் :- தம்பி ! 'தையல் சொற் கேளேல்' என்பது முதுமொழி. ஆனல், நீயோ எல்லாவற்றையும் இராதை விரும்பியபடியே செய்துவருகிருய். இது உன்னை எங்கே கொண்டுபோய்ச் சேர்த்து விடுமோ என்றுதான் அஞ்சுகிறேன்.

கண்ணன் :- அண்ணு! இராதை என்னைவிட வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும் மிகுந்தவள். அவளுடைய அன்பைப்பெற்ற நான் மிகவும் பாக்கிய சாலி என்றே நினைக்கிறேன். அரசியல் ஞானம் அனைத்தையும் பெற்ற அவள் இந்நாட்டையே ஆளத் தகுதிவாய்ந்தவள். அவளுடைய மந்திரா

லோசனேதான் என்னை இந்நாட்டின் தலைவனுக்கியது.

பலராமன் :- இளங்கன்று பயமறியாது என்று கூறுவார்கள். நீ அவளுடன் சேர்ந்து நாடகமாடுவதால், அவளுடைய கணவர் உன்னைப்பற்றி என்ன நினைப்பார் என்று நீ சிறிதாவது சிந்தித்ததுண்டா ?

கண்ணன் :- அண்ணு! அவளுடைய கணவர் என்ன அறியாப்பிள்ளையா ? எங்களுடைய உறவிலே களங்கம் கற்பிக்க நினைக்கிறீர்கள் நீங்கள். நான் மக்களின் உள்ளத்திலே மாருத இடம் பெற்றுவிட்டேன். அவர்கள் ஆண் என்ருலும், பெண் என்ருலும், எந்த வேறுபாடுமின்றி என்னை நேசிக்கிருர்கள். இதில் நீங்கள் என்ன குற்றம் கண்டுபிடிக்க நினைக்கிறீர்கள் ? ஆணுக்கும், பெண்ணுக்கும் மனம் ஒன்று என்பது தாங்கள் அறியாததா ?

பலராமன் :- நீ அவ்வாறு கூறலாம். ஆனுல் உலகம் உங்களைப் பழிக்கத்தான் செய்யும். மானம் கெட்டவன் என்ற பெயரை வாங்கிவிடாதே. நான் சென்றுவருகிறேன்.

**களம் : 1 காட்சி : 4**

(*துவாரகையில் கிருஷ்ணன் மாளிகை. தருமரும் பாண்டவர்களும் வருகிருர்கள்.*)

தருமர் :- கண்ணு நாட்டை நாம் ஆளுகிருேம். ஆனுல் உட்பகை மலிந்துவிட்டது. அவைகளைப்

போக்கவேண்டும். நான் ராஜ ராஜனுக, சாம்ராட்சிய பதவி அடைய வேண்டும். அதற்கு உன் உதவி யல்லவா தேவை?

கண்ணன்:- நானே சராசந்தனுல் மதுராபுரியை விட்டுத் துரத்தப்பட்டேன். அவனைக் கொன்ருல் தான் நீ ராஜ ராஜனுக முடியும்?

தருமர் :- அதற்கென்ன? நமது பீமன் சராசந்தனைக் கொல்லும் வலிமை படைத்தவன். அவனுக்குத் துணையாக நீ சென்ருல் நாம் நிச்சயம் வென்றுவிடலாம்.

கண்ணன் :- சரி; நமக்குத் துரியோதனனின் உதவி மிகமிக அவசியம். ஆகையால், அவனையும் சேர்த்துக் கொண்டு நாம் ராஜசூய யாகம் செய்வோம்.

தருமர்:- அப்படியே. நான் பலராமரைப் பார்த்து வருகிறேன்.

(*பலராமன் மாளிகை. தருமர் அங்கு வருகிருர்.*)

பலராமன் :- தருமபுத்திர, வருக. என்னைத்தேடி வரக் காரணம் யாதோ ?

தருமர் :- பலதேவா! என்னவிருந்தாலும் இரத்தபாசம் விட்டுப்போகுமா ? பாண்டவர்களும், துரியோதனுதிகளும் ஒன்றுபட்டு இராஜசூயயாகம் செய்து சராசந்தனை வெற்றிகாண நினைக்கின்ருர்கள். அவர்கட்கு உங்கள் உதவிவேண்டும்.

பலராமன் :- தருமபுத்திரரே! உங்களுடைய எண்ணம் மிகவும் சரியானது. பகைக்கப் பகைக்கப் பகையே மிகுந்துவிடும். அன்பின் வெற்றியே அழியா வெற்றி. நான் துரியோதனனுக்குக் குருவாயிருந்தவன். என் சொல்லை அவன் சிறிதும் தட்டமாட்டான்.

தருமர் :- எங்களுடைய பிதாமகரான பீஷ்மரும் இதைத்தான் பெரிதும் விரும்புவர். இக் காரியத்தைத் தாங்களே முடித்துத்தர வேண்டும்.

பலராமன் :- இதைவிட வேறு பெரும்பாக்கியம் எனக்கு உண்டா? நான் உடனே செய்து வைக்கிறேன்.

*(இராஜசூய யாகம் முடிந்துவிட்டது. பீமனால் சராசந்தன் கொல்லப்பட்டு விடுகிறான்.)*

தருமர் :- கிருஷ்ணன்தான் இந்த வெற்றிக்கே காரணம். ஆகையால் அவனே முதல் மரியாதைக்கு உரியவன். அவனுக்குப் பூஜை செய்வோம்.

பீஷ்மர் :- ஆம். கௌரவ பாண்டவர்களின் ஒற்றுமைக்கு அவனே காரணம். ஆகையால் அவனுக்கே அக்கிர பூஜை செய்துவிடுவோம்.

சிசுபாலன் :- அது கூடாது. கிருஷ்ணன் அரசனல்லன். அவன் தேவகியின் மகனாகப் பிறந்தவன். அவன் தந்தை உக்ரசேனனுக்குக் காரியஸ்தனாக இருந்தவன். அவனுடைய தந்தை இருக்கும்போது எவ்வாறு அவனை முதல்வனாக்க

லாம்? இடையர்கள் இடையே வளர்ந்து மாடுமேய்ப் பவனுக்கா முதல் மரியாதை? இங்கு எத்தனையோ அரசர்களிருக்கும்போது அரசனல்லாத அவனுக்கு முதல் மரியாதை செய்வது மன்னர்களை அவமதிப்ப தாகும். இது ஒருபோதும் பொருந்தாதே!

பீஷ்மர் :- சிசுபால! மன்னன் அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அவன் மக்களின் தலைவன். துவாரகைக்கு அதிபன். முடி மன்னனல்லாவிட்டாலும் முடிசூடா மன்னன் அவன்!

சிசுபாலன் :- மக்கள் மன்றத்தைக் கூட்டி மாநிலத்தை ஆளவேண்டுமென்று நினைப்பவன் கண்ணன். குடிமக்களுக்கு எது நன்மை எனத்தெரி கிறதோ அதன்படி ஆள்பவர்கள் நாம். இரு சாராரும் ஒன்று பட்டுப் பாரதத்தை ஆளமுடியும் என்பது வெறுங்கனவு.

கண்ணன் :- சிசுபால! மக்களுக்காக மன்ன னன்றி மன்னர்களுக்காக மக்கள் அல்ல என்பதை அறிந்துகொள். மக்கள் மன்றத்தை மதிக்காததால் தான், பல மன்னர்கள் மாண்டு மடிந்து போயினர். குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்த வேந்தர்க ளெல்லாம், நடை மெலிந்து சென்று காட்டில் கனிகளைப் புசித்து வாழுகின்றனர்

சிசுபாலன் :- கோபாலா! ஆடுமாடுகளை மேய்ப் பதை விட்டு விட்டு அரியாசனத்தில் அமர்ந்து, அரசர்க்கரசனாக இருக்க ஆசைப்படுகிறாய். இது என் உயிர் உள்ளளவும் நடவாது. நீ வீரனாக இருந்

தால் என்னுடன் போர் செய்து என்னையும் வென்று விட்டு இந்த யாகத்தைப் பூர்த்தி செய்துகொள்.

கண்ணன் :- வாய்த்துடுக்குடையவனே ! இது காறும் உன் சுடுசொற்களைப் பொறுத்திருந்தேன். இனிப்பொறுக்க முடியாது. போர்முரசு முழங் கட்டும் !

*(கண்ணன் சிசுபாலனைக் கொன்றுவிடுகிறான்.)*

பீஷ்மர் :- என் பிரிய மக்களே ! பாரத நாடு முழுவதும் ஒரு குடைக்கீழ் வரும் நாள் வெகு தூரத்திலில்லை. இனி இமயம் முதல் குமரி வரை நாம் அரசாளுவோம். உட்பகை ஒழிந்து விட்டது. நூற்று ஐவரும் ஒன்றாகிவிட்டோம்.

பலராமன் :- நான் பெருமகிழ்வெய்துகிறேன்.

கிருஷ்ணன் :- ராஜாதிராஜன் தருமன் வாழ்க !

எல்லோரும் :- ராஜாதிராஜன் தருமன் வாழ்க ! வாழ்க !

*(எல்லோரும் சென்றுவிடுகின்றனர். சகுனி தனக்கு அந்தரங்கமான ஒரு அமைச்சருடன் பேசிக்கொண்டு இருக்கிறான்.)*

சகுனி ;- அமைச்சரே! பாரத நாட்டைப் பண்புடன் காப்பதற்குக் கௌரவர்களே பிறப்புரிமை உடையவர்கள். ஆனால் கிருஷ்ணன் தருமனுடைய நிலையை உயர்த்திவிட்டான்.

அமைச்சர் :- ஆம். நூற்று ஐவரையும் ஒன்ருக்கித் தங்களுடைய செல்வாக்கைக் குறைக்கத் திட்டமிட்டுவிட்டான் கண்ணன்.

சகுனி :- நூற்று ஐவரையும் பிரித்தாலன்றி என் மனம் நிம்மதியடையாது.

அமைச்சர் ;- தங்களே வேறு நாட்டவர் எனக் கூறி உங்களேயே ஒழித்துக்கட்டி விடுவான் கண்ணன். என்ன இருந்தாலும் தாங்கள் அந்நியர் தானே !

சகுனி :- அமைச்சரே ! மாயாசாலங்களே மங்கையர்களிடம் அவன் காட்டலாம். ஆனுல் நான் பேதைப் பெண் அல்ல. பாருங்கள் என் சூழ்ச்சியின் திறனே.

அமைச்சர் :- மன்னராட்சி பெரிது என்பதையும் நாம் சூழ்ச்சியின் மூலம் கண்ணனுக்குக் காட்ட வேண்டும்.

சகுனி :- ஆம். இதற்கும் ஒரு முடிவு காண வேண்டுவது அவசியம்தான்.

*(திரை விழுகிறது.)*

## களம் : 1 காட்சி : 5

*(துவாரகையில் ஒரு பூஞ்சோலே. அங்கு இராதை எதையோ சிந்தித்த வண்ணமிருக்கிருள். அவள் தோழி அவள் அருகில்வந்து நிற்கிருள்)*

தோழி :- அம்மா! சிந்தனையைக் கலைத்துவிட்டதற்கு மன்னியுங்கள். காலமெல்லாம் கண்ணனைப் பற்றியே சிந்தனை செய்வதால் கருதியது கைகூடி விடுமா?

இராதை :- தோழி! கருத்திலே எழுந்த எண்ணங்களைக் காவியமாகத் தீட்டிக்கொண்டிருந்தேன். கண்ணன் வருவான், அவனிடம் என் சிந்தனைகளைக் கூறி ஒரு புது உலகத்தையே படைக்கச் செய்வேன். அந்தப் புது உலகத்திலே ஆண்டானும் அடிமையும் இருக்கமாட்டார். அந்த உலகத்திலே, நாங்கள் இனிமையாக வானம்பாடிகளைப்போலக் கானம்பாடி வாழ்வோம்.

தோழி :-கற்பனைக்கும் எட்டாத கோட்டையைக் கட்டிவிட்டீர்கள். இராதையும் கண்ணனுமாக ஒன்றுபட்டுப் புது உலகத்தை உண்டாக்கப் போகிறீர்கள் அல்லவா? கற்பனைதானே அம்மா! அதற்கு நம் நாட்டில் பஞ்சமேயில்லை?

இராதை :- தோழி! கணவனே கள்ளி என்று கூறுகிறார். பலராமனுக்கோ என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை. நான் என்னடி செய்வேன்!

தோழி :- குடியும் குடித்தனமுமாக இருக்கும் உங்களுக்கு ஏன் இந்த வம்புகளெல்லாம்? கண்ணனை மறந்துவிடுங்களம்மா!

இராதை :- என்ன! கண்ணனை மறந்துவிட வேண்டுமா? அது ஒருகாலும் முடியாது. உலகமே

எதிர்த்துவந்தாலும் நான் அவனை மறக்கவே முடியாதே.

தோழி :- எதையும் எண்ணித் துணிய வேண்டு மம்மா ! இல்லாவிட்டால் பழி பாவத்திற்கு ஆளாக வேண்டுமே !

இராதை :- என் உள்ளத்தை அறிந்த நீயுமா இவ்வாறு கூறுகிருய் ! கண்ணன் என்னையே நம்பி யிருக்கிருன். அவனை நான் இப்பொழுது வெறுத்துத் தள்ளினுல் பலராமன் மகிழ்ச்சியடைவான். எனக் குப் பேரும் புகழும் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனுல் என் வாழ்க்கையில் மகிழ்ச்சியே காணமாட் டேன். நம்பினவனை நட்டாற்றில் கைவிடுதல் நியாயமா ?

தோழி :— யாதவகுலம் ஒரு பெரும் குலம். உங்கள் செய்கையினுல் கண்ணனுக்குப் பெரிய கண்டங்கள் வரலாம். அவனை இப்பொழுதே சூழ்ச்சிக்காரன் என்கிருர்கள். அவன் உங்களுடைய கைப்பொம்மையாகி அழியவேண்டுமா, அம்மா ?

இராதை :- கண்களை விற்றுவிட்டுச் சித்திரம் வாங்கச் சொல்கிருயடி தோழி. அதைப் பார்த்தால் பிறர் கைகொட்டி நகைக்கமாட்டார்களா ?

தோழி :- நான் ஏதோ சொல்லிவிட்டேன். உங்கள்பாடு அவன்பாடு ; எனக்கென்ன தெரியும் ?

(*கண்ணன் வருகிருன்.*)

கண்ணன் :- கைகொட்டி ஏன் நகைக்கமாட்டார்கள்? இராதையே! நான் உன்னை நேசிப்பதால் யாவரும் என்னை ஏசுகிருர்கள்.

இராதை :- என்ன கண்ணு? எப்பொழுது வந்தாய்? இராஜசூயமெல்லாம் முடிந்ததா?

கண்ணன் :- ஆம்! பீஷ்மர் மிகவும் புத்திசாலி. நாட்டை இரண்டு துண்டாக்கித் துரியோதனுதிகளை யும், பாண்டவர்களையும் ஆளும்படி செய்துவிட்டார். பாண்டவர்கள் இராஜசூயம் செய்து வெற்றியும் கண்டுவிட்டார்கள். நான் சிசுபாலனைக் கொன்று விட்டேன். சகுனிக்கு ஒரே பொருமை!

இராதை :- வடநாடு முழுதும் பாண்டவர்கள் கையிலும் துரியோதனுதிகள் கையிலும் வந்தடைந்து விட்டது. வடநாட்டில் ஒரு பேரரசு தலைதூக்க ஆரம்பித்துவிட்டது. எப்படியாகுலும் இரத்தபாசம் விட்டுப்போகுமா! பாண்டவர்களும், துரியோதனுதிகளும் எப்படியும் ஒன்றுகூடிவிடுவார்கள் அல்லவா? பின்னர்........

கண்ணன் :- ஏன் இந்தக் கலக்கம்? இராதையின் கடைக்கண் வீச்சிலேயல்லவா இந்தத் துவாரகையின் எதிர்காலமிருக்கிறது. உன் கருத்தென்ன? சொல்! கணப்பொழுதிலே முடிப்பேன்?

இராதை :- கண்ணு, நீ இப்பொழுது இந்நாட்டின் தலைவன். ஆனுல் நானே ஒரு சாதாரணப் பெண். மக்களால் மதிக்கப்படுபவன் நீ. மாயக்காரி

யின் வலையிலே சிக்கி மண்ணை இழந்தான் மாதவன் என்னும் பழிச்சொல் எனக்கு வேண்டாம்.

கண்ணன் :- ஒன்றும் புரியவில்லையே. சிறிது விளக்கம் தரக்கூடாதா !

இராதை :- நான் கட்டிய கோட்டைகளெல்லாம் தரைமட்டமாகிவிட்டன. தீட்டிய திட்டங்களெல்லாம் தீய்ந்துபோய்விட்டன ! கண்ணா ! நாம் இனிப் பிரியவேண்டியதுதான்.

கண்ணன் :- உலைவாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியாது. மக்களுடைய பிறப்புரிமை பேச்சுரிமை. அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய் ? நீ மனத்திலே கட்டிய கோட்டைகளைக் கண்முன் உருவாக்கிக் காட்டுகிறேன் நான் வருகிறேன்.

## களம் : 1 காட்சி : 6

*(கண்ணன் மாளிகை. இரு சேவகர்கள் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)*

முதல் சேவகன் :- என்னண்ணே ! எப்போ பார்த்தாலும் நம்ம கண்ணனும் ராதையும் ஒண்ணாகவேயிருக்கிறார்கள்.

இரண்டாம் சேவகன் - அதுதான் தம்பி எனக்கும் புரியலே. நம் தலைவர் போடும் திட்டங்களை நாம் தெரிந்துகொள்ளவே முடியலே.

முதல் சேவகன் :- அண்ணே ! ஒருகா……

இரண்டாம் சேவகன்: அட தறிதலே! என் னடா சொல்றே? ராதை அம்மா, நம் கண்ண னுக்கு அத்தைடா. மக்கள் மனசிலே மாருத இடம்பெற்ற மன்னரிடமாடா குத்தம் பாக்கிறே.

முதல் சேவகன் :-மகா மன்னனைக் கண்டுட்டே ! நாளை நாம் வேண்டாமின்னு இவருடைய பதவி, பட்டமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விடுமே, மறந்துட்டியா ?

இரண்டாம் சேவகன் :- தம்பி! மன்னனல்லா விட்டாலும், முடிசூடாத மன்னன் நம் தலைவன் அவனைப் பற்றித் தவறுதலாக ஏதாவது சொல்லி டாதே ; பெரிய இடத்துச் சமாச்சாரம் !

*(இராதையின் தோழி வருகிருள்)*

முதல் சேவகன் :- அம்மா! கண்ணனும் இராதையும் எப்பொழுது பார்த்தாலும் இணைபிரி யாமல் இருப்பதைப் பார்த்துப் பலர் பலவிதமாகப் பேசுகிருர்களே !

இரண்டாம் சேவகன் :- மன்னருக்கு ஏனோ இந்தமாதிரி மதி மருண்டுபோய்விட்டது.

தோழி :- அன்புடன் பழகுவது குற்றமா ?

சேவகர்கள் :- ஆம் அம்மா ! கட்டிய கணவனை விட்டுவிட்டு எந்தநேரமும் கண்ணனுடனிருந்தால் உலகம் என்னதான் கூருது !

தோழி :- ஆம்! இந்த உலகம் எதைத்தான் கூறுது? மக்கள் மனத்திலே மாருத இடத்தைப் பெற்றுவிட்டான் கண்ணன். பொருமைக்காரர்கள் அவனுடைய புகழை விரும்பவில்லே. இதுதான் உண்மை.

சேவகர்கள் :- நாம் ஏனம்மா இதைப் பற்றிப் பேசவேண்டும்? பெரியவிடத்துப் பொல்லாப்பு

(*தோழி சென்றுவிடுகிருள்*)

## களம் : 1 காட்சி : 7

(*கண்ணன் தனிமையில் ஆழ்ந்த சிந்தனையுடனிருக்கிருன். இராதையும் அவள் தோழியும் அங்கு வருகிருர்கள்.*)

கண்ணன்:- இராஜசூய யாகத்தில் என்னுடைய பெருமைதான் உயர்ந்துவிட்டது. சராசந்தன் இறந்து விட்டான். இனிமேல்தான் என் திட்டங்களேத் தீட்டவேண்டும்.

இராதை :- மாயாசாலங்களே என்னிடமே காட்டவேண்டுமென்ற எண்ணமா? உன்னுடைய மாயத்திற்கு எத்தனே பெண்கள் பலியாகப் போகிருர்களோ? நான் அறியேன்! கடவுளே, அவர்களே நீதான் காப்பாற்றவேண்டும்.

கண்ணன் :- உன்னுடைய கண்ணன் கண்ட கனவுகள் நனவாகுமா என்று நினேக்கிருயா? என்னுடைய மாயைக்கு மற்ற பெண்கள்

பலியாகலாம். ஆனால் உன்னை நான் பலியாக்கிவிட முடியுமா ?

இராதை :- கண்ணன் காட்டிய வழியைக் கைப் பிடிக்கும் நான் உன் செயலைத் தடுத்துவிடுவேனா ?

கண்ணன்:- இந்திரப் பிரஸ்தத்திற்குத் துரியோதனாதிகள் வந்தார்கள். பாஞ்சாலி அவர்களைப் பார்த்து ஏளனமுடன் நகைத்தாள்.

இராதை :- ஏன், கண்ணா, அப்படிச் செய்தாள் ?

கண்ணன் :- மயன் கட்டிய மாளிகையாகையால் மேடு பள்ளமாகவும், பள்ளம் மேடாகவும் தோன்றும். இதை அறியாது துரியோதனாதிகள் கீழே விழப் பாஞ்சாலி பார்த்தாள்; அவளுக்குச் சிரிப்பு வந்தது.

இராதை :- என்னவிருந்தாலும் பெரிய இடத்துப் பெண்ணிற்கு அடக்க ஒடுக்கமாகப் பழகத் தெரிந்திருக்கவேண்டும்.

(ஒரு சேவகன் உள்ளே நுழைகிறான்)

சேவகன் :- தலைவ! சகுனியின் மாயவலையிலே மயங்கிவிட்டார்கள் பாண்டவர்கள். சூதாடவும் தலைப்பட்டார்கள். நாட்டையே பணயமாக வைத்து ஆடுகிறார்களாம்.

கண்ணன் :- இராதே! நான் சென்று வருகிறேன்.

இராதை :- மங்களமுண்டாகட்டும்.

(செல்கிறான்)

## களம்: 1 காட்சி: 8

*(இராதையின் கணவர் வெகுநேரமாக அவளுக்காகக் காத்திருக்கிறார். ஆனால் அவள் வரவில்லை. பின்னர் இரவில்தான் அவர் அவளைக் காணமுடிந்தது)*

இராதையின் கணவர் :- அன்பே! ஆனந்தமாகப் பொழுதுபோக்கலாமென்று ஆசையுடன் காத்திருந்தேன். மன்றல் மணக்கும் தென்றல் காற்று, மனவமைதியைத் தரவில்லை. ஏன் நீ சோலைக்கு வரவில்லை!

இராதை :- என் எண்ணம் நிறைவேறும் வரையில் நான் என்னையே மறந்தவளாகிவிடுவேன் போலிருக்கிறது! கண்ணனுடைய கற்பனை உலகில் சஞ்சரிக்கும்போது நான் என்ன செய்கிறேன் என்பதையே மறந்துபோகிறேன்.

இராதையின் கணவர் :- கண்ணன் கருதியதெல்லாம் நடக்கும் என்று நீயும் நம்புகிறாயா? கடமை என்று கூறிக் கணவர்களையும், மனைவிகளையும் பிரித்துக் கண்ணீர் விடும்படியாகச் செய்வது தானே அவன் எண்ணம் இந்தக் கடமைச் சூதில் நீயும் சேர்ந்துகொண்டுவிட்டாய். கடமை அல்ல; அது மடமை.

இராதை :- பால்போன்றது உங்களது உள்ளம். யார்யாரோ ஏதேதோ சொல்லி உங்கள் மனத்தைக் கலைத்துவிட்டார்கள்.

இராதையின் கணவர் :- அன்பே நான் உன்னைப் பற்றி எந்தவிதமாகவும் நினைக்கவில்லை. ஆடவரும் கண்டு அகமகிழும் திருவும் உருவும் படைத்தவன் அவன். அவன் எழுப்பும் ஏழிசை நாதத்திலே என் உள்ளமெல்லாம் உருகிவிடுகிறது.

இராதை :- நாதா; உருவத்தில் மட்டுமல்ல, உள்ளத்திலும் உயர்ந்தவன்; அருங்குணம் படைத்தவன்; பாரதநாட்டிற்குள் பகைவர்களே வரக்கூடாது என்பதுதான் அவன் எண்ணம். பெண்களும். ஆண்களும் சமமாய் வாழவேண்டும் என்பது அவன் விருப்பம். ஆனால் .........

இராதையின் கணவர் :- ஆனால், அவன் எண்ணத்திற்கு மாறாக "கடமை" என்ற பெயரால், கணவனும் மனைவியும் ஒன்றுபடாது வாழத்திட்டம் தீட்டுகிறான். உறவினர்கள் ஒற்றுமையுடன் இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

இராதை :-ஏன் அவனை வீணாகப் பழிக்கிறீர்கள்.

இராதையின் கணவர் :- கண்ணனுடைய கபட நாடகம் எல்லாம் எங்கே கொண்டுபோய்விடுமென்று சிறிதாவது சிந்தித்தாயா ?

இராதை :- ஆடவர்களுக்கு எதைக் கண்டாலும் சந்தேகம்தான். பெண்கள் உரிமையாய் வாழ்வதை ஆண்கள் விரும்புவதில்லை.

இராதையின் கணவர் :–ஆம்! உரிமை என்ற பெயராலே, கணவனுக்குக் களங்கம் காண்பதை

யார்தான் விரும்புவார்கள்? அரசியலில் பெண்கள் பங்குகொள்ளவேண்டும் என்பதுகூட எனக்குப் பிடிக்கவில்லை.

இராதை:- தெரிந்தது, தெரிந்தது; எங்களுடைய உறவில்கூட நீங்கள் களங்கம் காண நினைக்கிறீர்கள், இல்லையா?

இராதையின் கணவர்:- அன்பே நான் உன்னை நன்ருக அறிந்தவன். மக்கள் மனத்திலே நிலைத்த இடத்தைப் பெற்றுவிட்டான் கண்ணன். அவனை நானும் போற்றிப் புகழ்கிறேன் ஆனுல் .........

இராதை:- ஏது, ஆனுல், ஆனுல் என்று சொல்லி என் வாழ்க்கையைப் பாழ்படுத்திவிடுவீர்கள் போலிருக்கிறதே!

இராதையின் கணவர்:- இதைக்கேள். பாமை உன்பேரில் சந்தேகம் கொண்டுவிட்டாள். உலகமே உங்கள் உறவிலே களங்கம் காண நினைக்கிறது. பலராமனைப் பற்றியும் சிறிது கவனமாயிருக்க வேண்டும்.

இராதை:- உலகம் எதைக்கண்டுதான் கவலைப் படுகிறது? அம்மம்ம, நம்மை வாழவிடாது உலகம். உங்களுடைய வாழ்க்கையில் பங்குகொண்டவள் நான். உங்களுடைய பெருமைக்கோ, குலத்திற்கோ ஒரு குற்றமும் வராமல் பார்த்துக்கொள்வேன்.

---

(தருமன் நாட்டையும் தங்களையும் இழந்தபின் பாஞ்சாலியையும் வைத்துச் சூதாடி அவளையும் இழந்துவிடுகிறான். அவளைத் துச்சாதனன் சபையிலே கொண்டுவந்து துயிலுரிகிறான்.)

பாஞ்சாலி :- கண்ணா! கண்ணா! என்ன அநியாயம்! யாராவது இதைத்தடுக்க மாட்டார்களா? கண்ணா, நீ ஒருவன்தான் என்னைக் காப்பாற்ற முடியும்! ஆ, கண்ணா! கண்ணா!

கண்ணன் :- (உள்ளே வருகிறான் துரோபதையைப் பார்த்து) தங்கையே அஞ்சவேண்டாம். உடுக்கை இழந்தவன் கைபோல நான் வந்துவிட்டேன். (துரியோதனனை நோக்கி) துரியோதனா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? பெண்ணினத்திற்குப் புகழ்தேடித் தரும் மன்னனல்லவா நீ! அவளை விட்டுவிடு!

சகுனி :- பந்தயத்தில் பெற்றபொருளை நாங்கள் எதுவேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அவள் எங்களுக்குச் சொந்தம்.

கண்ணன் :- பெண்ணினத்தை அடிமைசெய்யும் வழக்கத்தை அறவே ஒழித்துவிடு என் உயிர் உள்ளளவும் அதற்கு உடன்படமாட்டேன்.

துரியோதனன் :- வேறு வழி?

கண்ணன் :- பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டிலும் ஓராண்டு மறைவாகவும் வாழட்டும். அதன்பின் அவர்கள் நாட்டை அவர்களுக்கே ஒப்படைத்துவிடுகிருயா ?

துரியோதனன் :- சம்மதம்.

## களம் : 1 காட்சி : 10

*(பாண்டவர்கள் உடன்பட்டுக் காட்டிற்குச் சென்றுவிடுகின்றனர். கண்ணன் மாளிகையில் இரு சேவகர்கள் திரும்பவும் உரையாடுகிறார்கள்).*

முதல் சேவகன் :- அண்ணே ! இராதை அம்மா போக்கே அலாதிதான். அவங்கதான் அண்ணே கண்ணனைக் கெடுத்திட்டாங்க

இரண்டாம் சேவகன் :- தம்பி ! அரசியலே ஒரு சூதாட்டம்; அதில் நம்ம கண்ணன் இராஜா. இராதை ராணி; பாண்டவர்களும், துரியோதனுதிகளும் அவர்களுடைய படைகளும், யுத்தவீரர்களும் ஒரே அதம்தான் இராணி இருக்கும்வரையில்தானே இராசாவின் ஆட்டமும் பாட்டமும்.

முதல் சேவகன் :- நீ சொல்றது புரியலேயே அண்ணே !

*(இரண்டு சேவர்கர்களும் உரையாடிக்கொண்டிருக்கும்போது தோழி அங்கு வருகிருள்.)*

தோழி :- என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள் ! ஊர்வாயை மூடினுலும் உங்கள் வாயை மூட முடியாது போலிருக்கிறதே.

## களம் : 1 காட்சி : 11

(கண்ணன் மாளிகை : இராதையும், கண்ணனும் பேசிக்கொண்டிருக்கிருர்கள்)

கண்ணன் :- பதின்மூன்று ஆண்டுகள் பறந்து சென்றுவிட்டன! பாண்டவர்கள் பாராளவேண்டும்! அதற்கு வகை செய்யவேண்டுமே.

இராதை :- அண்ணன் பலராமர் துரியோதனனுக்குத் துணே! தம்பி நீ பாண்டவருக்குத் துணே! நன்ருயிருக்கிறது உங்கள் நடவடிக்கை!

கண்ணன் :- நான் பாண்டவர்களுக்கு வேண்டியவனுமல்லன். துரியோதனனுக்கு வேண்டியவனுமல்லன். மன்னராட்சி மறைந்து மக்களாட்சி தோன்றவேண்டுமென்று துடிக்கிற என்னே ஏளனம் செய்யாதே.

இராதை :- நல்ல மக்களாட்சி! எதிர்க்கட்சிக்காரர்கள்தாம் தலைவனுக்கு மாருகப்பேசுகிருர்கள் என்ருல் உன் உடனிருக்கும் தோழர்களும் உன் கொள்கையைக் கண்டிக்கிருர்களே! அது தெரிகிறதா உனக்கு?

கண்ணன் :- தெரிகிறது; நம்மிருவருடைய உறவைப் பலர் வெறுக்கிருர்கள். நாம் என்ன குற்றம் செய்துவிட்டோம்? அவர்களுக்கு என்ன தீங்கு நேரிட்டுவிட்டது நம் உறவால்?

இராதை :- மாயாசாலம் செய்யும் உன் மனதைக் கேட்டுப்பார்! நாம் என்ன குற்றம் செய்கிருே.

மென்று ? ஒன்றுபட்ட வாழ்வைக் குலைத்து நம் சுய நலத்திற்காக ஒரு கற்பனை மாளிகை கட்ட எண்ணு வது சரிதானா ?

கண்ணன் :- காலம் கடந்துவிட்டது. இனி இவைகளைப்பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை. நாம் இருவரும் கூடினோம். நம்மிருவருடைய சிந்தனை களும் ஒன்றாயின. இனி யோசிப்பதில் பயனே யில்லை.

இராதை :- நம் சுயநலத்திற்காக எத்தனை பெண்களின் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் என்பதையாவது சிந்தனை செய்யவேண்டாமா ?

கண்ணன் :- ஆமாம், செய்யத்தான் வேண்டும்; ஆனால், ஒன்று ; உன்னையே நான் நம்பியிருக் கிறேன், தெரிகிறதா? என்னைக் கைவிட்டு விடாதே. நான் பாண்டவர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

*(தருமனைப் பார்க்கக் கண்ணன் சென்றுவிடு கிறான்.)*

**களம் : 1 காட்சி ; 12**

*(இராதை தனிமையில் கண்ணனைப்பற்றிய சிந்தனையிலே மூழ்கியிருக்கிறாள். தோழி வருகிறாள்)*

தோழி :- அம்மா ! ஊரார் தங்களைப் பற்றிப் பேசும் சுடுசொற்களைக் காதுகொடுத்துக் கேட்க முடியவில்லை. ஏனம்மா உங்களுக்கு இந்த வம்பு துன்பெல்லாம் ?

இராதை :- ஆருயிர்த் தோழி! இலட்சியவாதிக ளெல்லாம் துன்பத்தையும் பழியையும் ஏற்றுத்தாஞகவேண்டும். என் இலட்சியம் நிறை வேறுமாஞல் "இராதாகிருஷ்ணன்" என்று இந்த உலக மெல்லாம் போற்றும்படி வாழ்வேன்.

தோழி :- உலகத்தை நன்ருக அறிந்துகொள்ள வில்லையம்மா நீங்கள். உலகம் உங்களைப் போற் ருது. புழுதியைத்தான் வாரித் தூற்றும்.

இராதை :- போற்றிஞலும் சரி, தூற்றிஞலும் சரி, ஏற்றதொருசெயலைத் துணிந்தே செய்வேன்! யார் எதிர்த்தாலும் அஞ்சமாட்டேன்.

தோழி :- ஏதோ, நல்லதென்றுபட்டதைச் சொன்னேன்!

(போய்விடுகிருள்.)

## களம் : 1 காட்சி : 13

*(கண்ணனை எதிர்கொண்டழைத்துத் தருமர் உப சரிக்கிருர் பாஞ்சாலி அங்கு வருகிருள்.)*

பாஞ்சாலி :- உங்கள்வரவு நல்வரவாகட்டும். நாட்டை இழந்தோம். அல்லல் பல அடைந்தோம். இனி எங்களுக்கு வாழ்வு உண்டா?

கண்ணன் :- தங்கையே! வருந்தாதே. நானே சென்று உங்களுக்காக வாதாடுகிறேன்

தருமன்:- நீதான் தூது செல்லவேண்டும்.

*(கண்ணனுடைய தூது சரியாக நடைபெருமல் போரே மூழும் நிலைமை வந்துவிட்டது.)*

## களம் : 1 காட்சி : 14

(கண்ணன் இராதையைத் தேடிவருகிறான்)

இராதை :- எந்தக்கோட்டையைப் பிடிப்ப தற்கு என்ன திட்டமோ?

கண்ணன் :- போர்! போர்! என்று இருவரும் கூறுகின்றனர். பாண்டவர்களிடமோ படையில்லை. கர்ணனை வென்றாலன்றி நாம் துரியோதனாதிகளை வெல்லமுடியாது.

கண்ணன் :- கர்ணன் இறந்தாலன்றிப் பாண்ட வர்களுக்குப் போரில் வெற்றி என்பது முடியாத காரியம்.

இராதை : குந்தியிடம் போய்ச் சொல்வது தானே!

கண்ணன் :- சரியான சமயத்தில் ஞாபகப்படுத் தினாய்.

## களம் : 1 காட்சி : 15

(கண்ணன் குந்தியிடம் சென்று கர்ணன் அவள் மகன் என்பதைக் கூறிவிடுகிறான்.)

கண்ணன் :- அம்மையே? வருக! வருக!

குந்தி :- என்ன? போர்! போர்! எங்கும் இதே கூச்சலாக இருக்கின்றதே!

கண்ணன் :- அம்மையே! உங்கள் கடந்த கால வாழ்க்கையைச் சிறிது திரும்பிப் பாருங்கள். அன்று நீங்கள் விளையாட்டாகச் சூரியனை நினைத்து அதன் காரணமாக ஒரு மகனைப்பெற்றது நினைவிருக்கிறதா? அந்த மகன்தான் இப்பொழுது வள்ளல் கர்ணனாக விளங்குகிறான். அவனை நாம் நம் பக்கம் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

குந்தி :- நான் சென்று வருகிறேன்.

## களம் : 2 காட்சி : 1

*(கர்ணனின் மாளிகை. கர்ணனிடம் ஒரு சேவகன் குந்தி வந்திருப்பதாகக் கூறுகிறான். கர்ணன் எதிர்கொண்டழைக்கிறான்.)*

கர்ணன் :- அம்மையே! பாண்டவர்களின் தாயான தாங்கள் என் இல்லத்திற்கு வந்தால் பாருலகம் கர்ணன் புகழைப் பாடாதா? என்ன வேண்டும் தாயே!

குந்தி :- தாய்! ஆம். நான் உன் தாய்தான்! ஆனால் இன்று நீ என்னை வேற்றுமைக் கண்களுடன் நோக்குகிறாய்?

கர்ணன் :- உண்மையாகவா? அப்படியானால் இந்தச் சேலையை அணிந்துவாருங்கள்.

*(குந்தி புதுச் சேலையுடன் பொலிவுடன் காட்சி தருகிறாள்.)*

கர்ணன் :- அம்மா! தேர்ப்பாகன் மகன் என்று அன்று நினைத்திருந்தேன். ஆனால் நான் பாண்டு வின் புத்திரன் என்று பெயர்பெற்றுவிட்டேன். நான் முன்செய்த வினை என்று நொந்துகொண்டிருந் தேன். ஆனால் இன்று மிகவும் பாக்கியவானாகி விட்டேன்.

குந்தி :- மகனே! துரியோதனாதிகளுக்கும் பாண்டவர்களுக்கும் போர் மூண்டுவிடப் போவதை அறிவாயல்லவா? நீயும் பாண்டவர்களுடன் சேர்ந்து விட்டால் உனக்கே மணிமகுடம் சூட்டிவிடு வார்கள். நீ பேரரசனாக வாழலாம்.

கர்ணன் :- அம்மா! நீ என் தாய். ஆனால் தாயன்பு இன்னதென்று அறியாமலே நான் வளர்ந்து விட்டேன். பெற்ற மகனிடத்தில் அன்பு இல்லாமை யாலோ, பெரும் பழியை ஏற்க அஞ்சியோ, நீ இது காறும் என்னை எண்ணவில்லை. ஆனால் பெற்றோ ரைத் தெரிந்துகொள்ளாத நிலையிலேயே துரியோ தனன் எனக்கு வாழ்வளித்தான். அவனை மறக்க என்னால் முடியாதம்மா!

குந்தி :- தாயன்பும் சகோதர பாசமும் உன் னிடம் இல்லையா?

கர்ணன் :- இருக்கிறது. ஆனால் அவன் எனக்குத் தந்தையினும் சிறந்தவனாகத் தோன்று கிறான். ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன், கேள். நானும், துரியோதனனுடைய மனைவி பானுமதியும்

சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தோம் அப்பொழுது துரியோதனன் வந்து விட்டான். இதனைக் கண்ட பானுமதி எழுந்து செல்லத் தொடங்கினாள். ஆனால் தோற்றுப்போவதற்கு அஞ்சியே எழுந்து செல்லுகிறாள் என எண்ணி நான் அவளுடைய சேலையின் தலைப்பைப் பிடித்து இழுத்தேன். அவளுடைய இடையிலே அலங்காரமாயிருந்த மணிகள் சிதறி ஓடின. அப்பொழுது அங்கு வந்த துரியோதனன் "எடுக்கவா? கோக்கவா?" என்று கேட்டான். இதை விடவா சகோதர வாஞ்சை?

குந்தி :- மகனே! நீ தான் உன் தம்பியருக்கு வாழ்வளிக்க வேண்டும்.

கர்ணன் :- தாயே! நீரின்மேல் எழுத்து வாழ்க்கை, நேற்று இருந்தவர் இன்று இல்லை; உலகத்துக்கு இதுதான் பெருமை ஆகவே, நான் துரியோதனன் பக்கத்திலே போர் செய்வதுதான் கருமமும், தருமமும் ஆகும்.

குந்தி :- (சிந்தித்து) ஆமாம். ஆமாம் மகனே, அப்படியானால் நீ எனக்கு ஒரு வரமாவது தருவாயா?

கர்ணன் :- என்ன வரம் வேண்டும்? எது வேண்டுமானாலும் தருகிறேன்!

குந்தி :- நாகாஸ்திரத்தை ஒருமுறைக்கு மேல் விடக்கூடாது. இந்த ஒரு வரம்தான் நான் உன்னை வேண்டுவது.

கர்ணன் :- ஒரு முறை தவறியபின் மறுமுறை அஸ்திரம் விடுவது என் பெருமைக்கு இழுக்காகும்.

இந்த வரத்தை உனக்குத் தந்தேன். நீயும் எனக்கு ஒருவரம் தரவேண்டும். நான் இறந்தபின் என்னை உன் மகன் என்று உலகறியச்செய்யவேண்டும்.

குந்தி :- மகனே! இதைக்காட்டிலும் எனக்கு என்ன பேறு வேண்டும்?

**களம் : 2 காட்சி : 2**

*(கண்ணன் பாண்டவர்களிடம் சென்று போரன்றி வேறு வழியில்லை எனக்கூறுகிறான். ஆனால் சகாதேவன் இதனை ஒத்துக்கொள்ளவில்லை.)*

சகா:- கண்ணா! அண்ணன் தம்பிகளாக நாங்கள் வாழ்வது உனக்குப்பிடிக்கவில்லை. காந்தார நாட்டிலிருந்து வந்த சகுனி நூற்றுவரையும் கெடுத்துக் கொண்டிருக்கிறான் அவன் அந்நியன். அடிமைப் படுத்தலாம் நம் நாட்டை என்று திட்டமிட்டு வருகிறான். ஆனால் நீயோ நம் நாட்டவன் மேலும் உறவினனும்கூட. அப்படியிருக்க இந்த அடுத்துக் கெடுக்கும் வழக்கம் உனக்கு எங்கிருந்து வந்தது?

கண்ணன் :- சகாதேவா! எல்லாம் அறிந்தவன் போல் பேசுகிறாயே! போரைத் தவிர்க்க நீதான் ஒரு வழி சொல்லேன்.

சகா :- கண்ணா! உன் திட்டங்களை எல்லாம் நான் அறிந்துகொண்டுவிட்டேன். நூற்று ஐவரையும் அழித்துவிட்டு அதன்மேல் உன்னுடைய பேரரசை நிறுவ எண்ணுகிறாய். இதற்குப்

பாண்டவர்களில், தருமனும், பார்த்திபனும் ஒத்துக் கொள்ளலாம். ஆனால் உன்னுடைய அரசியல் சூதாட்டம் என்னிடம் செல்லாது. இப்பூபாரத்தைத் தாங்கக் கர்ணன் இருக்கிறான். இவன் அரசு செலுத்தட்டும். பார்த்திபன் இதற்கு உடன்படான் ஆகையால் அவனைக் கொன்றுவிடவேண்டும். திரௌபதி தன் கூந்தலை முடியமாட்டேன் என்று சபதம் கூறியிருக்கிறாள்; ஆகவே அவள் கூந்தலையே அகற்றிவிடவேண்டும். ஆனால் இதையெல்லாம் செய்தால்மட்டும்போதாது; நீ பெரிய மாயக்காரன். உன்னைப் பிடித்துக் கட்டிவிடவேண்டும். அப்பொழுதுதான் இந்த மகா பாரதப்போரே வராமல் காக்கமுடியும்.

கண்ணன் :- சகாதேவா! மெச்சினேன் உன் புத்திசாலித்தனத்தை! ஆனால் என்னை எப்படிக் கட்டுவாய்?

சகா :- கண்ணா! உன்னுடைய திட்டங்களை எல்லாம் அறிந்தவன் நான். எங்கள் ஐவரையும் கொன்று உன் கனவை நனவாக்கிக்கொள்ள நீ போட்ட திட்டத்தை எல்லோருக்கும் விளக்கிக் கூறினால் நூற்றைவரும் ஒன்றாகிவிடுவோம். அப்பொழுது உன் கதி?

கண்ணன் :- சகாதேவா! உன்னால் ஆகாதது உலகத்தில் உண்டோ! நான் இந்நாட்டவன். பாரத நாடு சகுனியின் துரோகச் செயலால்

அடிமை நாடாகக்கூடாது என்பதற்காகவே திட்டங்களைத் தீட்டி வருகிறேன். ஆகையால் ஒன்றும் செய்துவிடாதே! எல்லாம் உன் விருப்பப்படியே நடத்துவேன்; இம்மியும் தவறமாட்டேன்.

சகாதேவன் :- கண்ணா! சூழ்ச்சியில் வல்லவன் நீ. நூற்றுவரையும், ஐவரையும் கொன்று உன் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறாய். ஆனால் எங்கள் ஐவரையும் மட்டுமாவது காப்பாற்றுகிறேன் என்று நீ கூறினாலன்றி நான் உன் திட்டங்களுக்கு உடன்படமாட்டேன்.

கண்ணன் :- சரி. உங்கள் ஐவரையும் காத்து ஒரு தீங்கும் நேராவண்ணம் செய்கிறேன். போதுமா?

சகா :- கண்ணா! மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்னும் மூன்றாலும் எங்கள் குலமே சீரழிந்துவிட்டது. நாட்டைப் பிரிக்க எண்ணினோம். திரௌபதியின் மோகத்தால் துரியோதனாதிகளையும் பகைத்துக்கொண்டோம். ஆனால் நீயோ எல்லா ஆசைகளையும் வென்றவன். உன்னை நாங்கள் ஏதும் செய்யமுடியாது.

கண்ணன் :- பாரதப்போர் எழுந்துவிட்டது! மனத்தைத் திடப்படுத்திக்கொள்! பார்த்திபன் மனம் சஞ்சலிக்கலாம்! ஆனாலும் அவனையும் நான் தேற்றிவிடுகிறேன்.

## களம் : 2 காட்சி : 3

*(இராதையின் மாளிகை. இராதை துக்கமே உருவெடுத்தவள்போல காட்சி தருகிருள்.)*

கண்ணன் :- இராதை! ஏன் உனக்கு இந்த மனவாட்டம்?

இராதை :- போர் மூண்டுவிட்டதாமே? நீ என்ன செய்யப்போகிருய்? உன் அண்ணுவோ துரியோதனுதிகளை நம்பியிருக்கிருன். நீயோ பாண்டவர்கள் கட்சியில். இதன் முடிவை நினைக்க எனக்கே பயமாயிருக்கிறது.

கண்ணன் :- சதுரங்க ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது. படைகளைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? அதிலும் இராணி நீ இருக்கும்போது.

இராதை :- இராணி நான் என்ருல் இராஜா நீ. ஆனுல் என்னைக் கட்டுப்படுத்திவிட்டால் உன் ஆட்டமெல்லாம் ஆட்டம் கண்டுவிடுமே.

கண்ணன் :- மதிநுட்ப மந்திரி நீ; கட்டுவதும், கட்டு அவிழ்ப்பதும் நீ. நீ இருக்கும்போது என்ன குறைவு எனக்கு? நான் வருகிறேன்.

## களம் : 2 காட்சி : 4

*(கண்ணன் ஒரு மலர்ச்சோலையில் உட்கார்ந்திருக்கிருன். அவன் ஆழ்ந்த சிந்தனையில் வரும் காலத்தைப்பற்றிய எண்ணத்துடன் இருந்தான் அப்பொழுது அவனுடைய திட்டம் உருவாகிக் கொண்டேயிருந்தது.)*

கண்ணன் :- (தனக்குள்) சகாதேவன் காரியத்தைக் கெடுத்துவிட நினைத்தான். ஆனால் அவனை எவ்வாறோ சமாளித்துவிட்டேன். என்றாலும் வெற்றி நமது என்று கூறிவிடமுடியுமா ?

*(இராதை வருகிறாள்.)*

இராதை :- என்ன கண்ணா ! என்ன ஆழ்ந்த யோசனை ?

கண்ணன் :- என் திட்டங்களெல்லாம் நினைத்தபடியே நடந்துவிட்டன. போரின் முடிவிலே நமக்குத்தான் வெற்றி !

இராதை :- கண்ணா ! அர்ச்சுனனை இன்னும் நீ அறிந்துகொள்ளவில்லை. கடைசியில் நம் எல்லோரையும் ஏமாற்றிவிடுவான்.

கண்ணன் :- அவன் ஏமாற்றம் பெண்களிடத்தில்தான். என்னிடம் ஒரு மருந்து இருக்கிறது. அதுதான் "உபதேசம்"

இராதை :- ஆ ! இதுதானா முடிவு. நம் இன்ப வாழ்க்கைக் கோட்டைகளெல்லாம், பிறருடைய கண்ணீராலும், செந்நீராலுமா உருவாக்கப்பட வேண்டும் ! இப்பொழுதே என்னைப்பற்றிப் பலர் பலவாறாகப் பேசுகிறார்கள். இதுவும் சேர்ந்துவிட்டால் பிறகு சொல்லவும் வேண்டுமோ !

கண்ணன் :- வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது சரியல்ல. நாம் வாழப் பிறந்தவர்கள்.

இராதை :- இது எங்கே கொண்டுவிடுமோ ? ஒன்றும் தெரியவில்லையே !

## களம் : 3 காட்சி : 1

*(போர்க்களம். கண்ணன் அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகனாக அமர்ந்து சாரத்தியம் செய்து வருகிறான்.)*

அர்ச்சுனன் :- கண்ணா ! என் முன் நிற்கும் என் பிதாமகர், குரு, தாயாதிகளைக் கண்டவுடன் என் மனம் கலங்குவிட்டது. வேண்டாம் இப்போர் ! நாங்கள் பதின்மூன்று ஆண்டுகள் காட்டில் வாழ்ந்தோம். இனியும் அப்படியே வாழ முடியும்.

கண்ணன் : பார்த்திபனே ! எண்ணித்துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவோம் என்பது இழுக்கு. போர் ! போர் ! என்று பேசும் நீயா கோழையாகிவிட்டாய். சிறிது சிந்தித்துப்பார். உன் கடமை என்ன என்பதைச் சிறிது கருதிப்பார். உற்றார், உறவினர் என்பதைச் சிந்திக்கப் போர்க்களமா இடம் ? போரிலே வெற்றி காண்பதுதான் கடமை. பற்றின்றிக் கடமையைச் செய்.

பார்த்திபன் :- சரி ! செய்கிறேன். அதுதான் கரும வீரனுக்குத் தருமம்.

## களம்: 3 காட்சி: 2

(இராதை கண்ணன் வரவிற்காகக் காத்திருக்கிருள்.)

கண்ணன் :- இராதை! வெற்றி நம் பக்கத்தில் தான். துரியோதனுதிகள் எல்லாம் மாண்டு போனுர்கள். பாண்டவர்கள் வெற்றிகண்டுவிட்டார்கள்.

இராதை :- கண்ணு! கொடுத்த வாக்கையும் மறந்துவிடுவாய் என்று நான் நம்பவில்லை. பஞ்ச பாண்டவர்களைக் காப்பாற்றுவேன் என்று கூறினுயே! அவர்கள் மக்கள் எல்லோரையுமே அழித்துவிட்டாயாமே. இது நியாயமா?

கண்ணன் :- பாண்டவர்களைக் காப்பாற்றுகிறேன் என்று கூறினேனே யன்றிப் பாண்டவர் குலத்தைக் காப்பாற்றுவதாக நான் சொன்னேனு?

இராதை :- என்ன மாயம்!

கண்ணன் :- பாண்டவர்களைக் காப்பாற்ற என்னுல் முடியுமென்ற நம்பிக்கை அப்போது இல்லை. உன்னுடைய சக்தியை நம்பியே ஒப்புக் கொண்டேன். ஆகையால் தான் ப ண்டவர்களை மட்டும் காப்பாற்றுகிறேன் என்று வாக்களித்தேன். பாண்டவர் குலத்தைப்பற்றிப் பேச்சில்லையே.

இராதை :- உன் மாயாசாலமெல்லாம் நான் அறிவேன்.

## களம் : 3 காட்சி : 3

(தருமரும் மற்ற பாண்டவர்களும்)

சகாதேவன் :- அண்ணா ! நாட்டைத் துண்டு போடுவது என்று நினைத்தது எவ்வளவு தவறு என்பதை நான் முன்பே சொன்னேன். ஆனால் பாஞ்சாலியின் பசப்பு வார்த்தைகளை நம்பி மதி மோசம் போய்விட்டீர்கள் ! இன்று நாம் என்ன பெருமை பெற்றுவிட்டோம்? வள்ளல் கர்ணன் நம் உடன்பிறந்தவன் ; நன்றிமறவா நாகரிகன். அவனைப் பிரிந்துவிட்டோம். மக்களை இழந்தோம்.

தருமன் :- நாம் நாடாளலாம் என்று எண்ணி யிருந்தோம். ஆனால் இன்று நாம் அதையும் இழந்து விட்டோம். கண்ணன் நம்மையெல்லாம் அடிமை யாக்கத் திட்டமிட்டுவிட்டான். இவன் இரும்பு மனம் உடையவன் என்பதை நான் அறியவேயில்லை. மன்னராட்சியை மடியச்செய்து மக்களாட்சியைப் புகுத்திவிட்டான். கலி பிறந்துவிட்டது. அர்ச்சுனா! நீயே அரசாள். நான் சென்றுவருகிறேன்.

அர்ச்சுனன் ! அண்ணா ! காலம் மாறிவிட்டது உண்மையே ! மக்களாட்சியில் நாம் மகிழ்வு காண முடியாதா ?

தருமன் :- தம்பி ! கண்ணன் மிகவும் தந்திரசாலி. சகுனியின் திட்டங்களை நன்கு அறிந்தவன். பாரதம் ஒரு சூழ்ச்சிக்காரன் கையிலே சிக்கிவிடக்கூடாது என்பதற்காக நம்மைக்கொண்டு துரியோதனாதிகளை

அழித்துவிட்டான் சகாதேவன் ஒருவன்தான் இந்த உண்மையை அறிந்திருந்தான். அதை நாம் பொருட்படுத்தவில்லை. அவனில்லாவிட்டால் நாம் ஐவருமே அழிந்திருப்போம். தியாகத்தின் சின்னமான கர்ணனின் சாவிலே நான் வாழ்வுபெற விரும்பவில்லை. நான் போகிறேன்.

## களம் : 3 காட்சி : 4

*(கண்ணனுடைய மாளிகை. அமைச்சர்களும் மற்றவர்களும் கூடியிருக்கின்றனர்.)*

கண்ணன் :- அமைச்சர்களே ! நான் உங்களுடைய நன்மதிப்பைப் பெற்றவன். பாரெங்கும் பாராளுமன்றங்கள் அமைத்து மக்களுடைய ஆட்சி மிளிரவேண்டுமென்று கனவு கண்டேன். இந்த உயரிய இலட்சியங்களை அடைய உற்றார் உறவினர் என்பதையும் பாராது பற்றின்றிக் கடமையைச் செய்தேன். பேரரசர்களாக வாழ நினைத்த பலரும் மண்ணோடு மண்ணாய்விட்டனர். தேவர்களுடைய பகையும், அசுரர்களுடைய கலகமும் முடிமன்னர் ஆட்சியும் மறைந்துபோயின. நீங்கள் என்னிடத்தில் வைத்திருந்த நம்பிக்கைக்கும், பொறுப்பிற்கும் ஏதும் ஊறுசெய்யாவண்ணம் நடந்துகொண்டுவிட்டேன். இனி உங்களுடைய தீர்ப்பு ?

அமைச்சரில் ஒருவர் : தலைவ ! மக்களாட்சியில் நீங்கள் நன்மதிப்பு வைத்திருக்கிறீர்கள். மன்னர்

களை எல்லாம் மகுடம் இழக்கச் செய்துவிட்டீர்கள். ஆனால்........

கண்ணன் :- ஆனால் என்ன, அமைச்சரே! தயங்காது சொல்லும்.

அமைச்சர் :- மக்கள் தலைவன் ஒழுக்கமுடைய வனாய் இருக்கவேண்டுமென்று மக்கள் விரும்புகின்றனர். தங்களுக்கும் இராதைக்கும் உள்ள உறவில் மக்கள் பலர் ஐயுறுகின்றனர்.

கண்ணன் :- அமைச்சரே? மக்களாட்சியிலே தலைவனாக இருப்பவனுக்கு எதிர்ப்புகள் இருந்து கொண்டுதானிருக்கும். நல்லாட்சியில் குற்றம் காணமுடியாதவர்கள், என்னுடைய ஒழுக்கத்தில் களங்கம் காட்ட நினைக்கின்றனர்.

அமைச்சர் :- ஒரு ஆணும் பெண்ணும் எந்த நேரமும் விளையாடிக்கொண்டிருந்தால் அதனை மக்கள் என்னவென்று நினைப்பார்கள்?

கண்ணன் :- அமைச்சரே! மக்கள் நினைப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை, மதியூகி மந்திரி நீரும் நினைக்கிறீரே! இது தான் விசித்திரம். கற்பு என்பதற்குப் பொய்யாமொழிப்புலவர் திருவள்ளுவர் என்ன கூறினர் என்று நேற்று அவையிலே வந்த தமிழ் அறிஞர் பேசியதைக் கேட்கவில்லையா? "நிறை காக்கும் கற்பே மேல். சிறை காக்கும் கற்பு என்ன பயன்?" என்று கூறியிருக்கிறார் வள்ளுவர். இராதை அன்பின் பிறப்பிடம். பொறுமைக்கு ஓர் இலக்

கணம். கற்பின் உறைவிடம். அவள் என் தாய். என்னைச் சீராட்டி வளர்த்தவள். அவளது தாயன் பிலே வளர்ந்தேன். அவள் எனக்கு குரு. இன்று இந்த நாட்டிற்குத் தலைவன் நான் என்றால், அமைச்சரே! அது அவள் இட்ட பிச்சை.

அமைச்சர் :- ஏதோ தவறுதலாக நினைத்து விட்டோம். பெற்ற அன்னையிலும் பெருமைக்குரியவள் வளர்த்த தாய் என்று தெரியாது பேசி விட்டோம். பொறுத்தருள்க!

*(இராதை வருகிறாள்)*

இராதை :- கண்ணா! எல்லாம் நன்றாகவே முடிந்து விட்டது. இணையில்லாத இடையர் குலத்தைப், பாரதத்தின் தலைவிதியை, நிர்ணயிக்கும்படி செய்து விட்டாய். உன்னுடைய திறமையே திறமை!

கண்ணன் :- அம்மா! உங்கள் அடியவன் நான், நான் எங்கோ பிறந்தேன் எங்கோ வளர்ந்தேன். நான் சிறு பிள்ளையாகத் தொட்டிலிலே இருக்கும்போதே என்னை எடுத்து வளர்த்து ஆளாக்கிவிட்டீர்கள் நீங்கள் இல்லையேல் நான் இந் நிலைக்கு வந்திருக்கமுடியுமா?

இராதை :- கண்ணா! மக்களாட்சியை அறிந்து கொண்டாயல்லவா? நம்முடைய உறவில் கூடக் களங்கம் காணுகிறது உலகம். மன்னராட்சியா யிருந்தால் நம்மைப் போற்றிப் புகழ்ந்திருப்பார்கள்.

பேச்சுரிமை என்ற பெயராலே தகுதி பெற்ற தலைவர்களையும் வாழ விடாது இவ்வுலகம். எதிர்க்கட்சிக் காரர்கள் நம்மைப் பழிக்கிறார்கள் என்றாலும் குறை யில்லை; அது நமக்கு நல்லதொரு பாதுகாப்பு. ஆனால் நம்மவர்களே…………

அமைச்சர் :- அன்னையே! பழிப்பது உலக வழக்கம். நீங்கள் இருவரும் ஒரு மன்னன் பேரரசனாகி மக்களாட்சியை மதிக்காமல் இருந்துவிடுவானோ என்று மன்னர் பரம்பரையே ஒழித்துக்கட்ட முடிவு செய்தீர்கள். ஆனால் நீங்கள் ஏன் கண்ணனுடன் உறவு கொண்டிருக்கிறீர்கள் என்பதை, உங்கள் கணவரும், உலகமும் சந்தேகக் கண்கொண்டே பார்த்தார்கள். என்றாவது உண்மை வெளியாகமல் போகாது அம்மா!

இராதையின் கணவன் ;- அமைச்சரே! நான் இராதை கண்ணனுடன் உறவு கொண்டாடுவதை அறவே வெறுத்தேன் என்பது உண்மையே. ஆனால் அவள் உறவிலே களங்கம் கண்டேன் என்று நீர் கூறினீரே, அது தவறு. அவள் பெண் தெய்வம்.

அமைச்சர் :- அப்படியானால் மக்கள் கூறியவற்றை யெல்லாம் ஏன் நீங்கள் மறுக்கவில்லை.

இ. கணவன் ;- அமைச்சரே! நம்முடைய நாடு ஒரு சிறிய நாடு இராதை கண்ணனைப் பேரரசிற்குத் தலைவனாக்கத் திட்டம் இட்டாள். இதனைக் கண்டு நான் அஞ்சினேன். ஆதலால் தான் நான் இராதை

யின் உறவைக் கண்ணன் கைவிட்டாலன்றி நாட்டிற்கு நன்மை உண்டாகாது என்று நினைத்தேன்.

அமைச்சர் :- அப்படியானால், நீங்கள் கண்ணனின் வெற்றியில் நம்பிக்கை கொள்ளவில்லை என்று சொல்லுங்கள்.

இ. கணவன் :- உண்மை தான். மகாபாரதப் போர் ஆரம்பமாகும் முன் இதைப்பற்றி ஐயமுற்றேன். ஆனால் இராதை ஒரு உண்மை உரைத்தாள்.

அமைச்சர் ;- என்ன உண்மை!

இ. கணவன் ;- கண்ணன் பாண்டவருக்கும் கவுரவருக்கும் போர் மூட்டியபோதிலும் யார் வெற்றி கண்டாலும் இடையர்குலம் அழியாது என்று கூறினாள். ஆகையால்தான் அவர்கள் இருவரும் செய்த திட்டப்படியே கண்ணன் பாண்டவர்களுக்கு சாரத்தியம் செய்ய வேண்டுமென்றும், தன்னுடைய படைகளைக் கவுரவர்களுக்குத் தந்துவிட வேண்டுமென்றும் முடிவு செய்தார்கள்.

அமைச்சர் :- அன்னையே! தங்களைப் போன்ற பெண்களால் தான் இந்நாட்டிலே மக்களாட்சி நடைபெறுகிறது. தராசில் வைத்து நிறுப்பது போலப் பாண்டவ கவுரவர்களை நிறுத்து, பிரித்தாண்டுவிட்டீர்கள் இந்த இராஜ தந்திரம் ஒன்றைமட்டும் அறிந்து கொண்டிருந்தால் பெரும் சாம்ராஜ்யத்தையே நிறுவிவிடலாம், அல்லவா?

கண்ணன் :- அம்மா! நீங்கள்போட்ட திட்டங் களெல்லாம் நிறைவாகிவிட்டன. நானும் என் கடமையைச் செய்துவிட்டேன்.

இராதை :- உட்பகை மறைந்து விட்டது. நாடு நாடாகும். எண்ணிய காரியமெல்லாம் எண் ணியது போலவே நடக்கும்.

(தமிழ்ப் புலவர் வருகிறார்.)

புலவர் :- எங்கள் வள்ளுவர் என்ன கூறுகிறார் தெரியுமா? "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார் திண்ணியராகப் பெறின்". திண்ணிய எண்ணமுடைய இராதாகிருஷ்ணரே! நீங்கள் உள் ளத்தில் பொய்யாது வாழ்ந்து வந்ததனால் எல்லோர் மனதிலும் இடம் பெற்றுவிட்டீர்கள். வரும் சந் ததியார்கள் உங்களைத் தெய்வமாகவே வழிபடுவார்கள்.

கண்ணன் :- அது ஒன்றுமட்டும் வேண்டாம் புலவரே! எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் இந்நாட்டு மக்கள். எல்லோரும் இந்நாட்டு மன்னர்.

புலவர்:- ஆம்; ஆனால் எங்களுடைய பொய்யா மொழிப் புலவர் வள்ளுவர் வாக்குப் பொய்க்காதே "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப்படுவான்" என்றல்லவோ பேசுகிறார்.

இராதை :- இனி மக்களிடத்திலுள்ள மூட நம்பிக்கை மறையுமா?

புலவர்;- நம்பிக்கை என்பதே மூடம்தான் அம்மா! அடிமை வாழ்வை அகற்றி மக்களுக்கு நல்வாழ்வு தருபவர்களை எல்லாம் உலகம் கோவில் கட்டிக் கும்பிடத்தான் செய்யும் அம்மா! யுகங்கள் மாறலாம். வாழ்க்கை முறை மாறலாம். எண்ணச் சுழல்கள் மாறலாம். ஆனால் மனிதன் தன் இயற்கையை மட்டும் மாற்றிக் கொள்ளமாட்டான். "பாரில் எவர்க்கும் அடிமைசெய்யாதே பரிபூரணன் ஒருவனுக்கே அடிமை செய்" என்று எத்தனை மகான்கள் கூறினாலும் அவன் கேட்கமாட்டான். இதுதான் மக்கள் உலகம்.

கண்ணன் :- புலவரே! தமிழ்நாட்டு மூவேந்தர்கள் உங்களுக்கு வாரி வாரிக்கொடுத்தார்கள். நானும் அப்பரம்பரையிலே பிறந்தவன். உங்களுக்கு என்னவேண்டுமானாலும் தருகிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்.

புலவர் :- தலைவ! தமிழ் நாடு மூவேந்தர்கள் நாடு என்று தவறாக நினைத்துவிட்டீர்கள். உலகம் முழுவதுமே தமிழ் நாடு- "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த மனப்பான்மையுடன் வாழ்பவன்தான் தமிழன். ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்ற தமிழ்க்குலம் சீரும் சிறப்பும் பெறவேண்டுமென்பதே எங்கள் குறிக்கோள். தமிழன் பிறரிடம் தா என்று இரக்கமாட்டான். கொடுப்பதே அவன் தொழில். உலகம் வாழவேண்டும்; அதனால் தான் வாழவேண்டுமென்

பதே தமிழன் குறிக்கோள். உங்களுடைய நல்லாட்சியினால் மக்கள் வறுமை, பிணி, அறியாமை இவற்றிலிருந்து விடுபட்டு நல்வாழ்வு வாழ்வார்களேயானால் அதுதான் நீங்கள் தரும் சிறந்த பரிசு. தமிழ்ப்பரிசு. நான் சென்று வருகிறேன்.

கண்ணன் :-புலவரே! வடநாடு தென்னாடு என்று மக்கள்கூறலாம். ஆனால் காசியும், இராமேசுவரமும் உள்ள அளவும் பாரதம் ஒன்றாகவே இருக்கும். எல்லைகள் மாறலாம். ஆனால் கருத்து ஒற்றுமை எப்போதுமேயிருக்கும். இதைப் பாரதநாடு உணரும்படி செய்யுங்கள். அதுதான் புலவர் தொழில்; கடமையும்கூட.

புலவர் : தலைவ! வரலாற்று ஏடுகள் உங்களை இராதாகிருஷ்ணன் என்றே அழைக்கும்.

கண்ணன் :- அதுமாத்திரமல்ல. இராதாகிருட்டினன் என்றால் மக்களாட்சி என்பது பொருள்.

புலவர் :- வாழ்க இராதாகிருட்டினர்கள்; வாழ்க மக்களாட்சி. வாழி பாரதமணித்திருநாடு.

★